## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி

### ஏழாம் திருமொழி - ஆலைநீள் கரும்பு
### கண்ணனது பால லீலைகளைக் காணப் பெறாத தேவகியின் புலம்பல்

** ஆலைநீள் கரும்பன்னவன் தாலோ *
அம்புயத் தடங்கண்ணினன் தாலோ *
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ *
வேழப் போதகம் அன்னவன் தாலோ **
ஏலவார் குழல் என் மகன் தாலோ *
என்றென்றுன்னை என் வாயிடை நிறைய *
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத் *
தாயரில் கடை ஆயின தாயே 1

வடிக்கொள் அஞ்சனம் எழுது செம்மலர்க்கண் *
மருவி மேல் இனிதொன்றினை நோக்கி *
முடக்கிச் சேவடி மலர்ச் சிறு கருந்தாள் *
பொலியும் நீர்முகிற் குழவியே போல **
அடக்கி ஆரச் செஞ்சிறு விரல் அனைத்தும் *
அங்கையோடணைந்து ஆனையிற் கிடந்த *
கிடக்கை கண்டிடப் பெற்றிலேன் அந்தோ! *
கேசவா! கெடுவேன் கெடுவேனே 2

முந்தை நன்முறை அன்புடை மகளிர் *
முறை முறை தந்தம் குறங்கிடை இருத்தி *
எந்தையே! என் குலப் பெருஞ்சுடரே! *
எழுமுகில் கணத்தெழில் கவரேறே! **
உந்தையாவன் என்றுரைப்ப நின் செங்கேழ்
விரலினும் * கடைக்கண்ணினும் காட்ட *
நந்தன் பெற்றனன் நல்வினை இல்லா *
நங்கள் கோன் வசுதேவன் பெற்றிலனே 3

களிநிலா எழில் மதி புரை முகமும் *
கண்ணனே! திண்கை மார்வும் திண்தோளும் *
தளிர் மலர்க் கருங்குழல் பிறை அதுவும் *
தடங்கொள் தாமரைக் கண்களும் பொலிந்த **
இளமை இன்பத்தை இன்று என்தன் கண்ணால் *
பருகுவேற்கு இவள் தாய் என நினைந்த *
அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த *
பாவியேன் எனதாவி நில்லாதே 4

மருவு நின் திருநெற்றியில் சுட்டி
அசை தர * மணி வாயிடை முத்தம்
தருதலும் * உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டு கொண்டு * உள்ளம் உள்குளிர **
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து *
வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் *
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் * எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே 5

தண்ணந்தாமரைக் கண்ணனே! கண்ணா! *
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால் *
மண்ணில் செம்பொடியாடி வந்து * என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ! **
வண்ணச் செஞ்சிறு கை விரல் அனைத்தும் *
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில் *
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன் *
என்னை என் செய்யப் பெற்றது எம் மோயே! 6

குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்! *
கோவிந்தா! என் குடங்கையில் மன்னி *
ஒழுகு பேர் எழில் இளஞ்சிறு தளிர் போல் *
ஒரு கையால் ஒரு முலைமுகம் நெருடா **
மழலை மென்னகை இடையிடை அருளா *
வாயிலே முலை இருக்க என் முகத்தே *
எழில் கொள் நின் திருக்கண்ணிணை நோக்கம்
தன்னையும் * இழந்தேன் இழந்தேனே 7

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும் *
முகிழ் இளஞ்சிறுத் தாமரைக் கையும் *
எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு
நிலையும் * வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும் **
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் *
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் *
தொழுகையும் இவை கண்ட அசோதை *
தொல்லை இன்பத்திறுதி கண்டாளே 8

குன்றினால் குடை கவித்ததும் * கோலக்
குரவை கோத்ததும் குடம் ஆட்டும் *
கன்றினால் விளவெறிந்ததும் * காலால்
காளியன் தலை மிதித்ததும் முதலா **
வென்றி சேர் பிள்ளை நல்விளையாட்டம்
அனைத்திலும் * அங்கென் உள்ளம் உள்குளிர *
ஒன்றும் கண்டிடப் பெற்றிலேன் அடியேன் *
காணுமாறு இனி உண்டெனில் அருளே 9

வஞ்சமேவிய நெஞ்சுடைப் பேய்ச்சி *
வரண்டு நார் நரம்பெழக் கரிந்துக்க *
நஞ்சமார் தரு சுழிமுலை அந்தோ! *
சுவைத்து நீ அருள் செய்து வளர்ந்தாய் **
கஞ்சன் நாள் கவர் கருமுகில் எந்தாய்! *
கடைப்பட்டேன் வெறிதே முலை சுமந்து *
தஞ்சமேல் ஒன்றிலேன் உய்ந்திருந்தேன் *
தக்கதே நல்ல தாயைப் பெற்றாயே 10

** மல்லை மாநகர்க்கிறையவன் தன்னை *
வான் செலுத்தி வந்தீங்கணை மாயத்து *
எல்லையில் பிள்ளை செய்வன காணாத் *
தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல் **
கொல்லி காவலன் மாலடி முடிமேல் *
கோலமாம் குலசேகரன் சொன்ன *
நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள் *
நண்ணுவார் ஒல்லை நாரணன் உலகே 11

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---